திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் வரும் 16-ஆம் தேதி பறக்கும் ரயில் திட்டத்தைத் துவக்கி வைக்க இருப்பதாக பத்திரிகையிலே செய்தி பார்த்தோம். சேப்பாக்கம் வரை உள்ள இந்தத் திட்டத்தை, லஸ் வரையிலும் நீட்டிப்பதற்காக மத்திய அரசிடம் இருந்து எவ்வளவு நிதி ஒதுக்கவேண்டியுள்ளது. எதற்காக காலதாமதம் ஆகிறது. இதை அரசு வற்புறுத்தி உடனடியாக நிதியை ஒதுக்கி இந்தத் திட்டத்தை 1996-ஆம் ஆண்டிற்குள் முடிப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் பச்சைக்கொடி காட்ட, 16ஆம் தேதி அன்று இந்த ரயில் போக்குவரத்துத் திட்டத்தைத் துவக்கி வைக்க இருக்கிறார்கள் என்கிற செய்தியை நாங்களும் பத்திரிகைகளிலே படித்திருக்கிறோம். எனவே, தற்போது சேப்பாக்கம் வரையிலான பணிகள் முழுவதுமாக முடிவுற்று இருப்பதால், அந்தப் பகுதி வரையில் மட்டுமே அந்த ரயில் போக்குவரத்து இயக்கப்பட இருக்கிறது. சேப்பாக்கத்திலிருந்து லஸ் வரையில் உள்ள பணிகள் மத்திய அரசினுடைய நிதி உதவியை முழுமையாகப் பெற்ற பிறகு, வருகிற 1996-ஆம் ஆண்டு டிசம்பருக்குள் முடிக்கப்படும். வேறு எந்தக் காலதாமதமும் இதில் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துரித ரயில் திட்டத்திற்கு, நம்முடைய மாநில அரசினுடைய பங்கு எவ்வளவு என்பதை இங்கே அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு இதற்காக சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களை ரயில்வே துறைக்குத் தந்திருக்கிறது. இதுதான் மாநில அரசினுடைய பங்காகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 88, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

1995 நவம்பர் 10]

88—

பருத்தி சாகுபடிக்கு ஊக்கத் தொகை

*72360—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கரும்பு சாகுபடிக்கு ஊக்கத் தொகை கொடுப்பது போல் பருத்தி சாகுபடிக்கும் ஊக்கத் தொகை கொடுக்கப்படுமா?

(ஆ) பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பருத்தி சாகுபடிக்கென விவசாயிகளுக்குத் தனியாக ஊக்கத்தொகை ஏதும் தரப்படுவதில்லை.

(ஆ) பருத்தி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழக அரசானது, மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் பருத்தி அபிவிருத்தித் திட்டங்களைக் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தி வருகிறது:-

1. வீரிய ஒட்டு இரகங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரகங்களின் விதைகள் மான்ய விலையில் வழங்கப்படுகின்றது.

2. புரடீனியா புழுவினை கட்டுப்படுத்த நியுக்ளியர் பாலே ஹைராஸிஸ் வைரஸ் வழங்கப்படுகிறது.

3. சாகுபடி பரப்பு முழுவதற்கும் சமச்சீர் உரமிடுதல் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செய்யப்படுகிறது.

4. தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் வழங்கப்படுகின்றன.

5. பயிர் பாதுகாப்பு கருவிகள் வழங்கப்படுகிறது.

6. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றிய செயல்விளக்கங்கள் அமைக்கப்படுகிறது.

7. விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப வசதிகள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது.

[1995 நவம்பர் 10

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சலுகைகளை அளித்தும் கூட, இன்றையதினம் தேவைக்கு அதிகமாக பருத்தி உற்பத்தி செய்யப்படுவதில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 20 லட்சம் பேல்கள் தேவை என்றால், உற்பத்தி 6 லட்சம் பேல்கள்தான் இருக்கின்றன. கரும்புக்கு ஊக்கத் தொகை கொடுப்பதால், அதனுடைய பயன் மக்களுக்குப் போய்ச் சேர்ந்து உற்பத்தித் திறன் கூடுகின்றது. ஆகவே, பருத்தி உற்பத்தியை நிறைவு செய்யும் பொருட்டும், பருத்தியை அதிகமாக உற்பத்தி செய்வதன் மூலம் பருத்தியுடைய டிமாண்டை குறைக்கும் பொருட்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசை வற்புறுத்தி, அதன் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன், பல்வேறு மானியங்களை, கரும்புக்கு வழங்குவதைப் போல-இதற்கும் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குத் தேவையான பருத்தி 20 லட்சம் பேல்கள். ஆனால், இன்றைக்கு தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுவது 6 லட்சம் பேல்கள்தான். நமக்கு பற்றாக்குறை இருக்கிறது. என்றாலும், கரும்புக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை, உறுதி செய்யப்பட்ட விலையாக இருக்கிறது. அதைப்போல பருத்திக்கு என்று உறுதி செய்த விலை இல்லை. அடிப்படை விலையைக் கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தி இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் ஒரு நிரந்தரம் செயயப்பட்ட விலை கிடைக்கிறது என்று சொன்னால் உழவர்கள் விருப்பமுடன் பருத்தி சாகுபடியில் தீவிரமாக ஈடுபடுவார்கள். அதற்குரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று மாநில அரசு வலியுறுத்தியிருக்கிறது. எனவே இன்றைக்கு நம்மைப் பொறுத்தமட்டிலே பல்வேறு மானியங்கள் வழங்கி பருத்தி உற்பத்தியை ஊக்கப்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.35

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு ஒரு உறுதி செய்யப்பட்ட விலை இருப்பது போல, மாநிலமே முன் மாதிரியாக-பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவிப்பது போன்று-ஒரு உறுதி செய்யப்பட்ட விலையை பருத்திக்கு நிர்ணயம் செய்து அதை மத்திய அரசுககு எழுதி வலியுறுத்தி

1995 நவம்பர் 10]

பெற்று தருவதற்கும், அதே சமயம் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் அனைத்து பருத்தியையும் கொள்முதல் செய்து, இங்கே நம்முடைய கைத்தறித் துறையை நிறைவு செய்யும் பொருட்டு, இரு துறைகளும் ஒன்று சேர்ந்து, பருத்தி உற்பத்தியாளர்களுக்கு ஏதாவது சலுகைகள் வழங்குவதற்கு நம்முடைய அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு ஆலைக்கு எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு, அந்த எல்லைகளுக்குள்ளே விளையும் கரும்புகளை, அந்த ஆலை பெற்று அரவை செய்து அதற்கு உரிய தொகையைத் தருவது போல, ஒவ்வொரு பருத்தி ஆலைகளுக்கும் அவைகளுக்கு என்று எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அரசினுடைய மானியங்களும், அதோடு இணைந்து உழவர்களுக்கு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் அந்தப் பகுதியிலே விளையக்கூடிய முழு பருத்தியையும், அவர்களே பெற்றுக் கொள்வார்கள் என்று சொன்னால், அதற்கு முன்னால், ஓர் ஆண்டுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட விலையை அரசினுடைய ஒப்புதலோடு தருவதற்கு முன் வருவார்கள் என்று சொன்னால், அதற்கென்று ஒரு சிறப்புத் திட்டத்தை அரசாங்கம் தீட்டி செயல்படுத்துவதற்கு சிரமம் ஏதுமில்லை. ஏற்கெனவே நாங்கள் இதுபோன்ற ஒரு திட்டத்தை செயல்படுதத வேண்டும் என்று பருத்தி அரவை செய்யக் கூடிய ஆலைகளுடைய சம்மேளனத்தை தொடர்பு கொண்டு நாங்கள் பேசி வருகிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவின்றி வாழலாம், ஆனால் மனிதன் ஆடையின்றி வாழ முடியாது. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சருக்கு தெரியாதது அல்ல. குறிப்பாக..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சின்னசாமி உணவின்றி வாழ்ந்திடுவார். (சிரிப்பு) எது, எது சின்னசாமியாலே முடியாதோ அதையெல்லாம் சொல்லக்கூடாது. (சிரிப்பு)

திரு. வி.கே. சின்னசாமி: குறிப்பாக மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்கள் பருத்தி பயிரிடக்கூடிய ஒரு சிறந்த விவசாய குடும்பத்திலே பிறந்தவர் என்பது எங்களுக்குத் தெரியும். பொதுவாக

கிராம பகுதியிலே பருத்தி சாகுபடி என்பது உண்மையிலேயே குறைந்திருக்கிறது. எங்களுடைய பகுதியிலே, கோவை, பெரியார் மாவட்டம் போன்றவைகளை எடுத்துக் கொள்வீர்களானால், நூற்றுக் கணக்கான நூல் மில்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர் செல்வம், ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது அந்த இடத்திலே இன்னொரு உறுப்பினர் போய் நிற்பதே கூடாது. அதோடு நீங்கள் அங்கிருந்து பேசவும் செய்கிறீர்கள். உங்கள் இடத்தில் உட்காருங்கள். திரு. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: கோவை, பெரியார் மாவட்டங்களில் பஞ்சு மூலம் ஆடை தயாரிக்கக்கூடிய பஞ்சாலைகள் இன்றைக்கு பெருகிக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு தேவையான பருத்திகளை வெளி மாநிலங்களிலேயிருந்துதான் வாங்கக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதிலே மிகக் கஷ்டம் இருக்கிறது. பருத்தி போட்டு அதை தினந்தோறும் ஆட்களை வைத்து எடுக்க வேண்டியிருக்கிறது. அது மிக கஷ்டமாக இருக்கிறது. ஆகவே தான் பருத்தி சாகுபடி குறைந்து போயிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலே கூட 10 ஏக்கர் 15 ஏக்கர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். எப்போதுமே கேள்வி கேட்கத் தெரியவில்லை. (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, தாங்களும் விவசாய குடும்பத்திலே பிறந்தவர் என்பதால்தான் இதைச் சொல்கிறேன். தங்களுக்கு இது பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனாலேதான் கேள்வி சரியாக கேட்கத் தெரியவில்லை என்று சொல்லுகிறீர்களா? நேரிடையாக கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. வி. கே. சின்னசாமி: ஆகவே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வது, பத்து ஏக்க்ர் பருத்தி சாகுபடி செய்த விவசாயி இன்று ஒரு ஏக்கர் கூட செய்ய முடியாத சூழ்நிலை, கஷ்டம் இருக்கிறது. ஆகவே கரும்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போல பருத்திக்கு என்று கட்டாயமாக ஒரு விலையை நிர்ணயம் செய்தால்தான் இந்த பருத்தி சாகுபடியை காப்பாற்ற முடியும். ஆகவே மாண்புமிகு அமைசசர் அவர்கள், நிச்சயமாக மத்திய அரசோடு கலந்தோ, அல்லது மாநில